# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

| தரம் - 10 | வரலாறு – I | நேரம்: 1.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................

**கவனிக்க:**

- ❖ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ❖ 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4), என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- ❖ உங்களுக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.

பகுதி 1

1. வரலாற்றினைக் கற்பதற்குரிய மூலாதாரங்கள் மூலம் நாம் அறிந்து கொள்ளக்கூடிய விடயம் யாது?
(1) வரலாறு என்றால் என்பது பற்றி.
(2) அக்காலச் சமூகச் சூழல் பற்றி.
(3) வரலாற்றுச் சின்னங்கள் அபிவிருத்தி நடவடிக்கையின்போது அழிவடைகின்றன என்பது பற்றி
(4) வரலாற்றுச் சின்னங்கள் பாதுகாக்கப்பட வேண்டியது இல்லை என்பது பற்றி,

2. கீழே தரப்பட்ட A, B, C, D ஆகிய கூற்றுக்களை அவதானித்து தீபவம்சத்துடன் தொடர்புடைய விடைகளைத் தெரிவு செய்க.
A - இலங்கை வரலாற்றினைத் தொடர்ச்சியாகக் கூறுகின்றது,
B - கி. பி. 4 ஆம் நூற்றாண்டளவில் எழுதப்பட்டது.
C - டீகாவ என்னும் உரை நூல் எழுதப்பட்டது.
D - வரலாற்றுத் தகவல்கள் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.
(1) A, C (2) A, D (3) B, C (4) B, D

3. வரலாற்று நிகழ்வின் சமகாலத்தில் உருவாக்கப்பட்ட வரலாற்று ஆவணம்,
(1) தொல்பொருள் மூலாதாரம் (2) உள்நாட்டு இலக்கிய மூலாதாரம்
(3) வெளிநாட்டு இலக்கிய மூலாதாரங்கள் (4) போர்க்காவியங்கள்

4. இலங்கையில் பொலன்னறுவைக் காலத்தில் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் 'தம்பமஸ்ஸ' என்னும் நாணயம் செய்யப் பயன்பட்ட உலோகம்,
(1) தங்கம் (2) இரும்பு (3) வெள்ளி (4) செப்பு

5. இலங்கையில் தாழ்நில ஈரவலயத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த குகை,
(1) பெல்லன்பலதிஸ்ஸ (2) ஹோட்டன் சமவெளி
(3) சிகிரிய அலிகல (4) பாகியன்கல



kalvi.lk

6. இலங்கையின் மத்திய கற்காலத்திற்குரிய கேத்திர கணித உருவிலான கல்லாயுதங்கள் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டது,
(1) படிகக் கற்பாறைகள் (2) மிருக எலும்புகள் (3) கூரான தடிகள் (4) இரும்பு

7. வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்களின் பிரதான ஜீவனோபாய நடவடிக்கைகள்,
(1) வேட்டையாடுதல், அலைந்து திரிந்து உணவு சேகரித்தல்
(2) மந்தை வளர்ப்பு, நெற்பயிர்ச்செய்கை
(3) நெற்பயிர்ச்செய்கை, சேனைப்பயிர்ச்செய்கை
(4) வர்த்தகம், மீன்பிடி

8. இலங்கையின் ஆரம்ப குடியேற்றவாசிகளின் கலாசாரம், பண்பாடு நிலவிய காலப்பகுதி,
(1) ஆரம்ப வரலாற்றுக் காலம் (2) முன் வரலாற்றுக் காலம்
(3) வரலாற்றுக் காலம் (4) வரலாற்றுக்கு முற்பட்ட காலம்

9. புராதன இலங்கையில் பெரும்பான்மையானோரின் ஆதரவுடன் நாட்டை நிர்வகிக்கும் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதனைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட சொற்பிரயோகம்,
(1) சக்கரவர்த்தி (2) கிராமிக (3) பெருவிருப்பு (4) மபுறுமுக

10. அரசுக்கு முற்பட்ட காலத்தில் இலங்கையை ஆட்சி செய்த சொத்துள்ள செல்வந்தர்களுக்கு வழங்கப்பட்ட பெயர்,
(1) குர்க்கபதி (2) பருமக (3) கிருகபதி (4) கிராமிக

11. மழைநீரினால் ஊட்டம் பெற்ற கிராமக் குளங்கள் கால்வாய்கள் மூலம் இணைக்கப்பட்டிருப்பது,
(1) குளம் எனப்பட்டது (2) கால்வாய் எனப்பட்டது
(3) நீர்த்தேக்கம் எனப்பட்டது (4) குளத்தொகுதி எனப்பட்டது

12. அரசனான பத்தாவது வருடத்தில் கிராமங்களுக்கு எல்லைகளை நிர்ணயம் செய்த மன்னன்,
(1) பண்டுகாபயன் (2) துட்டகைமுனு (3) தேவநம்பியதீசன் (4) வசபன்

13. கி. பி. 9 ஆம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டின்படி அதில் குறிக்கப்பட்ட குறியீடுகள் நிரல் I இலும் அவை குறிக்கின்ற கருத்துக்கள் நிரல் II இலும் தரப்பட்டுள்ளன. நிரல் I இற்கு ஏற்ப நிரல் II இனைத் தொடர்புபடுத்தி சரியான விடையைத் தெரிவு செய்க.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. விசிறி | A - தூய்மை |
| 2. அன்னம் | B - மறுபிறவியில் எடுக்கும் பிறப்புக்கள் |
| 3. சந்திரப்பிறை | C - செங்கோல் |
| 4. காகம் | D - நிலைத்த தன்மை |

(1) CADB (2) ACBD (3) CBAD (4) DACB

14. தனிப்பட்ட உள்ளூராட்சிப் பிரதேசங்களை நிர்வகிப்பதற்காக மத்திய அரசு நிர்வாகிகளை நியமித்திருந்தமை என்பதற்கான சான்றாதாரம்,
(1) பனாகடுவ செப்பு சாசனம் (2) கல்பொத்த கல்வெட்டு
(3) வல்லிபுர பொற்சாசனம் (4) எம்பக்க மரச் செதுக்கல்

15. இலங்கையின் தென்பகுதியில் இருந்த வர்த்தக நகரங்கள் இரண்டு
(1) நில்வளதித்த, மகாவாலுகாகம (2) கோத்தபப்பத, மகாகம
(3) அபநகரம், அகநகரம் (4) தேவநகர, மகாகம


kalvi.lk

16. புராதன காலத்தில் இலங்கையில் முறையாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்த கைத்தொழில்,
(1) மட்பாண்டக் கைத்தொழில் (2) நூல் நூற்கும் கைத்தொழில்
(3) இரத்தினக்கல் அகழும் கைத்தொழில் (4) இரும்புக் கைத்தொழில்

17. கருங்கல் கட்டடமொன்றின் சிதைவு கண்டெடுக்கப்பட்ட அகழ்வு எது?
(1) இராவண எல்ல (2) ஆலாகான பிரிவேனா
(3) குருவிட்ட பட்டதொம்பலென (4) கித்துள்கல பெலிலென

18. புராதன பொறியியலாளர்கள் கருங்கற்களால் பாலம் அமைப்பதற்குரிய தொழில்நுட்பத்தினை அறிந்திருந்தனர் என்பதற்கான சான்றாதாரமாக விளங்குவது,
(1) மாதுறு ஓயா கற்பாலம் (2) மல்வத்து ஓயா கற்பாலம்
(3) கலா ஓயாவின் யோத கால்வாய் (4) மகாவலியின் மினிப்பே கால்வாய்

19. அலகொலவெவ, தெஹிஹுக அலகந்த என்ற இடத்திலிருந்த இரும்புச்சூளை எரிவதற்கு உரிய வளி கிடைக்கப்பெற்றது,
(1) இயற்கையாக வீசும் காற்றின் மூலம்
(2) லிமனைட், ஹெமடைட் என்ற இரசாயனப் பெயர்களைக் கொண்ட கற்களைப் பயன்படுத்தி
(3) ஊதுளை என்னும் கருவியின் மூலம்
(4) மரங் என்னும் மரத்தை எரித்துப் பெறப்பட்ட கரி மூலம்

20. அபயகிரி அகழ்வில் கண்டறியப்பட்டது
(1) நிற ஓடுகள் (2) தங்க நாணயம்
(3) மருத்துவ உபகரணங்கள் (4) வீடு தொடர்பான சான்றுகள்

21. கீழே நிரல் I இல் புராதன காலத்தில் அறவிடப்பட்ட வரிகளின் பெயர்களும் நிரல் II இல் அவ்வரிகள் அறவிடப்பட்ட நோக்கங்களும் தரப்பட்டுள்ளன. நிரல் I இற்கு ஏற்ப நிரல் II இனைத் தொடர்புபடுத்துக.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. மதர மஞ்சக்க | A - குளங்களிலிருந்து நீரைப் பயன்படுத்துதல் |
| 2. போஜக்கபதி | B - வெளிநாட்டிலிருந்து பொருட்கள் இறக்குமதி செய்தல் |
| 3. தக்கபதி | C - வாய்க்காலில் மீன்பிடித்தல் |
| 4. சுங்கவரி | D - அரச நிலங்களில் பயிர் செய்தல் |

(1) CDAB (2) CADB (3) ADCB (4) BADC

22. முதலாம் விஜயபாகு மன்னனுக்கு உதவி செய்த தண்டநாயக்கனின் பெயர் என்ன?
(1) ரிஷிகிரி (2) தேவபதிராஜா (3) சித்தாரும்பி புத்த நாயக்க (4) லங்காபுர

23. நீர்நிலைகளில் வாழும் பறவைகளைக் கொல்லக் கூடாது என சட்டமியற்றிய பொலன்னறுவை ஆட்சியாளன் யார்?
(1) கீர்த்தி ஸ்ரீ நிஸங்கமல்லன் (2) சாகசமல்லன்
(3) மகா பராக்கிரமபாகு (4) முதலாம் விஜயபாகு

24. புராதன காலத்தில் ரூப்பதக்க என்ற பெயரில் இருந்த விசேட அதிகாரியின் பொறுப்பு,
(1) நகரங்களைப் பரிபாலித்தல் (2) விகாரைகளைப் பராமரித்தல்
(3) அரசனுக்கு உணவு வழங்குதல் (4) நாணயங்களை வெளியிடுதல்

25. சுமார் 1400 ஆண்டு காலமாக இலங்கையின் தலைநகரமாக விளங்கிய நகரம் எது?
(1) கண்டி (2) அனுராதபுரம் (3) பொலன்னறுவை (4) கம்பளை

26. கி. பி. 6 ஆம் நூற்றாண்டின் பின்னர் இந்து சமுத்திர சர்வதேச வர்த்தகத்தில் ஆதிக்கம் செலுத்தியவர்கள்,
(1) போர்த்துக்கேயர் (2) அராபியர் (3) ஒல்லாந்தர் (4) பிரித்தானியர்



kalvi.lk

27. அனுராதபுர இராசதானிக் காலத்தில் சோழர் இலங்கையை ஆக்கிரமித்த போது, இலங்கையின் ஆட்சியாளன் யார்?
(1) ஐந்தாம் மகிந்தன் (2) நான்காம் மகிந்தன் (3) துட்டகைமுனு (4) வலகம்பா

28. முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் மனைவியான லீலாவதி மூன்று முறை ஆட்சி செய்வதற்கு உதவி புரிந்த வம்சத்தினர் யார்?
(1) மானவர்மன் வம்சம் (2) பரண் வம்சம் (3) கலிங்க வம்சம் (4) மோரிய வம்சம்

29. கண்டி நகரத்திற்குப் பாதுகாப்பு வழங்கிய நதி,
(1) மல்வத்து ஓயா (2) களனி கங்கை (3) மகாவலி கங்கை (4) கல்ஓயா

30. 'விஜயபாகு கொள்ளை' யின் போது மயாதுன்னைக்கு உதவிய கண்டி ஆட்சியாளன்,
(1) சேனாசம்மத விக்கிரமபாகு (2) யமசிங்க பண்டார
(3) கோனப்பு பண்டார (4) ஜயவீர பண்டார

31. கி. பி. 1594 இல் தந்துரைப் போரில் போர்த்துக்கேயரைத் தோல்வி அடையச் செய்த கண்டி இராச்சிய மன்னன்,
(1) முதலாம் இராஜசிங்கன் (2) முதலாம் விமலதர்ம சூரியன்
(3) இரண்டாம் இராஜசிங்கன் (4) இரண்டாம் விமலதர்ம சூரியன்

32. கண்டி இராச்சியத்தில் பிரதானிகளின் சேவைக்காக வழங்கப்பட்ட நிலம்,
(1) நிந்தகம் (2) கபடாகம் (3) விகாரகம் (4) தேவாலகம்

33. தேவதூதர்கள் என்னும் சித்திரத்தை வரைந்தவர்,
(1) லியானோடாவின்சி (2) ராபாயல் (3) மைக்கல் ஆஞ்சலோ (4) பெட்டிஷெல்லி

34. ஒல்லாந்தர் இலங்கையின் கரையோரப் பகுதிகளில் பரப்பிய சமயம்,
(1) கத்தோலிக்க சமயம் (2) இஸ்லாமிய சமயம்
(3) பென்ரிஸ்கோஸ் திருச்சபை (4) புரட்டஸ்தாந்து சமயம்

35. பெர்டினன்ட் மகலன் கண்டறிந்த நாடு,
(1) யமேக்கா (2) இந்தோனேசியா (3) பிலிப்பைன்ஸ் (4) கனடா

36. கி. பி. 1453 ஆம் ஆண்டு இஸ்லாமியரான துருக்கியர் கைப்பற்றிய நகரம்,
(1) ரோம் (2) அலெக்சான்ரியா (3) லிஸ்பன் (4) கொன்ஸ்தாந்திநோபிள்

37. 15 ஆம் நூற்றாண்டில் நாடுகாண் பயணங்களுக்கு அதிக ஆதரவு வழங்கிய போர்த்துக்கேய அரசன்,
(1) முதலாம் அல்போன்ஸ் (2) நான்காம் ஹென்றி
(3) இரண்டாம் ஜோன் (4) இரண்டாம் ஹென்றி

38. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருகை தந்த போது யாழ்ப்பாண இராச்சியத்தை ஆட்சி செய்த மன்னன்
(1) சங்கிலி (2) விஜயகூழங்கை (3) வரோதயன் (4) பரராச சேகரம்

39. இலங்கையின் கோட்டை இராச்சியம் போர்த்துக்கேயருக்குச் சொந்தம் என மரணசாசனம் எழுதி வைத்த மன்னன்,
(1) ஏழாம் புவனேகபாகு (2) தர்மபாலன் (3) மயாதுன்னை (4) ஆறாம் பராக்கிரமபாகு

40. ஆசியாவிற்கு வருகை தந்த ஒல்லாந்தரின் கீழைத்தேச வர்த்தக தலைமையகம் அமைந்திருந்த நகரம்,
(1) பத்தேவியா (2) கோவா (3) சென்னை (4) பாண்டிச்சேரி

(40 x 2 = 80 புள்ளிகள்)

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457